





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.09.2024) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில், சமூக நீதி சார்ந்த தந்தை பெரியார் நினைவுச் சொற்பொழிவு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மரு.நா.எழிலன், தாயகம் கவி, ஆர்.டி.சேகர்,துணை மேயர் மு. மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ட்ரான்சென் டைனமிக்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி கெனித்ராஜ் அன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விருதுநகர் மாவட்டம், செவல்பட்டியில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் வெடிவிபத்து:

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப்.20-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை, செவல்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், செவல்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (19.9.2024) காலை சுமார் 9.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம் அப்பையநாயக்கன்பட்டி கிராமம், ஆகாஷ் நகரைச் சேர்ந்த கோவிந்தராஜ் (வயது 27) த/பெ. கணேசன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் நூறு சதவீத தீக்காயத்துடன் சிவகாசி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைப் பெற்றுவரும் திரு.குருமூர்த்தி (வயது 19) த/பெ. பாண்டி என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், நூறு சதவீத தீக்காயத்துடன் தீவிர சிகிச்சைப் பிரிவில் ஆபத்தான நிலையில் சிகிச்சைப் பெற்றுவரும் திரு.குரு மூர்த்தி என்பவருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பேரறிஞர் அண்ணா 116வது பிறந்தநாள் விழா !

# அறந்தாங்கியில் அமைதி ஊர்வலம்! பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி ! சிவ.வீ.மெய்யநாதன் மரியாதை செலுத்தினர் !

புதுக்கோட்டை, செப். 20 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளையொட்டி புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மற்றும் கழகத்தினருடன் ஊர்வலமாகச் சென்று பேரறிஞர் பெருந்தகையின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வுகளில் தேர்தல் பணிக்குழு செயலாளர் பரணிஇ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே கலைமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன். கணேசன். எஸ்.எம்.சீனியார், கே. எஸ்.ரவி, எல்.குமார் (எ) துரைக் கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், கீரமங்கலம் பேரூர் கழகச் செயலாளர் கே.சி. சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பாத்திமா பீவி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியார் 146 -வது பிறந்த நாள்:

# சாலவாக்கத்தில் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் உறுதிமொழி ஏற்பு!

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் - நிர்வாகிகள் பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப். 20 -

தந்தை பெரியார் பிறந்த நாளான 17.9.2024 அன்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் சமூக நீதி உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சாலவாக்கம் ஒன்றிய திமுக சார்பில் தந்தை பெரியார் 146 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா நேற்று காலை சலவாக்கம் நிலையம் அருகில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம். எல்.ஏ. தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் டி. குமார் முன்னிலை விகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் அனைவரையும் வரவேற்றார்.

இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சாதி மத வேதமின்றி கலந்து கொண்ட பொது மக்களுடன் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பெரியாரின் 146 ஆவது பிறந்த நாளை குறிக்கும் வகையில் அப்பகுதி கிராம மக்களுக்கு 146 தென்னங் கன்றுகள் வழங்கப் பட்டது.

மேலும் சாலவாக்கம் ஊராட்சியில் பணி புரியும் 50 தூய்மை பணியாளர்களுக்கு காய்கறி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் வெங்கடேசன், சிவராமன், சத்யா சக்திவேல், வெங்கட்ராமன், சேகர், அழகப்பன், நந்தா, முரளி, விஷ்ணு உள்ளிட்ட திமுக கட்சியினர் கலந்து கொண்டனர்.

### கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில்

# 175 பேருக்கு நிபா வைரஸ் காய்ச்சல்!

## பள்ளி, கல்லூரிகள் மூடல்

மலப்புரம், செப்.20-

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் 175 பேருக்கு நிபா வைரஸ் காய்ச்சல் பரவியுள்ளது. இதனால்பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு மண்டலங்கள் அறிவிக்கப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் நிபா வைரஸ் காய்ச்சல் பரவிவருகிறது. இங்கு 175 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இதில் 74 பேர் சுகாதார பணியாளர்கள். இது குறித்து கேரள சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறியதாவது:

நிபா வைரஸ் காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளானவர்களில் 126 பேர் தீவிர பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். 49 பேருக்கு லேசான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 104 பேருக்கு தீவிரசிகிச்சை அளிக்கப்படுகிறது. மாஞ்சேரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 10 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 13 பேரின் ரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நிபா வைரஸ் பாதிப்புக்கு உள்ளானவர்களின் வீட்டை சுற்றி 3 கி.மீ தூரத்தில் வசிப்பவர்களுக்கு காய்ச்சல் உள்ளதா என்பதை பரிசோதிக்க 66 குழுக்களை சுகாதாரத்துறை அமைத்துள்ளது.

மலப்புரம் மாவட்டத்தில் 2 பஞ்சாயத்துகளில் உள்ள 5 வார்டுகள்கட்டுப்பாட்டு மண்டலங்களாகஅறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் அதிகளவில் கூட வேண்டாம் எனஅறிவுறுத்தப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு மண்டலங்களில் உள்ள கடைகளை மாலை 7 மணிக்கு அடைக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். அதேபோல் இங்குள்ள பள்ளி, கல்லூரிகள், சினிமாதி யேட்டர்கள், மதரஸாக்கள், அங்கன்வாடிகள், டியூஷன் மையங்கள் ஆகியவற்றை மூடவும் உத்தர விடப்பட்டுள்ளது.

மக்கள் முககவசம் அணியும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். திருமணம், துக்க நிகழ்ச்சிகளில் அதிகம் பேர் பங்கேற்க வேண்டாம்எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுஉள்ளனர். இவ்வாறு அமைச்சர் வீணா ஜார்ஜ் கூறினார்.



மெட்ராஸ் கோல்டன் சிட்டி அரிமா சங்கம் நடத்திய ஆசிரியர் தின விழாவில் கோடம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர்க்கு தொழிலதிபர் முரசொலி சிங்காரம் 20 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கினார். இவ்விழாவில் எஸ்.இராஜரத்தினம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'நல்லாசிரியர்' விருது பெற்ற ஏ.தமிழ்ச் செல்வனுக்கு கல்விச் செம்மல் விருது வழங்கினார். இவ்விழாவில் லயன் பன்னீர் செல்வம், லயன் எஸ்.இளங்கோ, லயன் மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி மாவட்டம் -கங்கை கொண்டான் 'சிப்காட்' தொழிற்பூங்காவில்

# 500 பெண் பணியாளர்கள் தங்கும் வகையில் குடியிருப்பு வளாகம்!

## அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை, செப்.20-

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி. ராஜா முன்னிலையில், திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் 870 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு வளாகத்தில் டிபி. சோலார் (T.P Solar Ltd.) நிறுவன தொழிற்சாலையில் பணிபுரியும் 500 பெண் பணியாளர்கள் தங்கும் வகையில் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) மற்றும் டாடா பவர் சோலார் லிமிடெட் (T.P Solar Ltd.) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

சிப்காட் நிறுவனமானது, 2022ம் ஆண்டில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) மற்றும் டைடல் நிறுவனத்துடன் (TIDEL) இணைந்து தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) என்ற சிறப்பு நோக்க முகமையை தமிழ்நாட்டில் உள்ள தொழில் துறை தொழிலாளர் நலனுக்காக உருவாக்கப்பட்டது.

தற்போது, இச்சிறப்பு நோக்க முகமை, சிறுசேரி (807 படுக்கை வசதிகள்), கங்கைக்கொண்டான் (870 படுக்கை வசதிகள்), சூளகிரி (1495 படுக்கை வசதிகள்), இருங்காட்டுக்கோட்டை (801 படுக்கை வசதிகள்) மற்றும் செய்யாறு (441 படுக்கை வசதிகள்) ஆகிய ஐந்து சிப்காட் தொழிற் பூங்காக்களில் குடியிருப்பு வளாகங்களை ரூ.204.50 கோடி திட்ட மதிப்பீட்டில் மொத்தம் 4,414 படுக்கை வசதிகளுடன் அமைத்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் 2023 -2024ன் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் திருநெல்வேலி மாவட்டம், கங்கைக்கொண்டானில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் பணிபரியும் 1,500 பெண் பணியாளர்கள் தங்குவதற்கு ஏதுவாக ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் குடியிருப்பு வளாகம் ஒன்று ஏற்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் குடியிருப்பு வளாகம் ஒன்றினை சுமார் ரூ.40.00 கோடி மதிப்பீட்டில் 870 பெண் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இவ்வளாகமானது சுமார் 1.20 இலட்சம் சதுர அடி பரப்பில் தரைதளம் மற்றும் மூன்று அடுக்கு கட்டடமாக ஆறு ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படவுள்ளது. இங்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான, உட்புற சாலை, குடிநீர் வசதி, தடையற்ற மின்சாரம், தெரு விளக்குகள் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும். மேலும், இங்கு, சமையலறை மற்றும் சாப்பாட்டு வசதிகள், வெளிப்புற விளையாட்டு பகுதி, தொழிலாளர்கள் அறை, ஒவ்வொரு தளத்திலும் பொழுதுபோக்கு அரங்குகள், சலவை அறைகள், உலர்த்தும் பகுதி, மருத்துவ அறை போன்ற வசதிகளுடன் அமைக்கப்படும்.

கங்கைகொண்டான் சிப்காட் தொழிற் பூங்காவில் அமைந்துள்ள திரு வாளர்கள் டிபி. சோலார் (TPSL) நிறுவனம் 313.53 ஏக்கர் நிலப்பரப்பில் சோலார் PV செல் மற்றும் மாட்யூல் உற்பத்தி வசதியை ரூ.4,300 கோடி முதலீட்டில், 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி செயல்பட்டு வருகிறது. அப்பணியாளர்களில், 80 சதவீதம் பெண் பணியாளர்கள் ஆவர்.

திருவாளர்கள் டிபி. சோலார் (TPSL) நிறுவன தொழிற்சாலையில் பணிபுரியும் 500 பெண் பணியாளர்கள், பயன்பெறும் வகையில் சிப்காட் நிறுவனத்தின் சிறப்பு நோக்க முகமையான தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) த்துடன் இணைந்து, சிப்காட் கங்கைக்கொண்டான் தொழிற் பூங்காவில் அமைய உள்ள குடியிருப்பு வளாகத்தில் தங்குவதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தொழில்துறை முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி. ராஜா அவர்கள் முன்னிலையில் நேற்று (19.09.2024) மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் செயல் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (TNIHPL) நிறு வனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. டி. சினேகா, டாடா பவர் நிறுவன மனித வள மேம்பாடு முதன்மை அலுவலர் திருமதி. அனுபமா ரட்டா, டாடா பவர் சோலார் முதன்மை செயல் அலுவலர் பாலாஜி பார்த்தசாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

### இராஜபாளையம் PACR அரசு மருத்துவமனையை ரூ.40 கோடியில்

# மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தும் பணி!

## டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. - எஸ்.தங்கபாண்டியன் ஆய்வு மேற்கொண்டனர்!

இராஜபாளையம், செப்.20-

இராஜபாளையம் PACR அரசு மருத்துவமனையை 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்டத்தின் தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது அப்பணியில் தற்போது இறுதி கட்ட பணி நடைபெற்றுவருவதை தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீகுமார் எம்.பி. எஸ்.தங்கபாண்டியன் ஆய்வு மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து தலைமை மருத்துவமனையில் இருக்கும் மருத்துவப்பிரிவுகள் சிறப்பு மருத்துவர்கள், மருத்துவக்கருவிகள், உயர்தர லேப், லேப் டெக்னீசியன், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் போன்ற வசதிகள் குறித்து இராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் எம்.பி.எம்.எல்.ஏ தலைமையில் தலைமை மருத்துவர் மாரியப்பன் முன்னிலையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேசிய எம்.எல்.ஏ, இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் புதிய கட்டப்பட்டு வரும் மருத்துவமனையை எப்போது திறக்கப்படும் என பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர், இத்தலைமை மருத்துவமனை நமது இராஜபாளையம் தொகுதிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பரிசு ஆகும், மேலும் தலைமை மருத்துவமனைக்கு MRI ஸ்கேன் உள்பட அனைத்து மருத்துவக்கருவிகள் சிறப்பு மருத்துவர்கள் செவிலியர்கள் லேப் டெக்னீசியன் மருத்துவப்பணியாளர்கள் அனைவரையும் நியமனம் செய்ய மருத்துவத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் ஆகவே வரும் நவம்பர் மாதத்திற்குள் மருத்துவமனை திறக்க திட்ட மிடப்பட்டுள்ளது எனக்கூறினார் தொடர்ந்து பேசிய எம்.எல்.ஏ, இராஜபாளையம் தொகுதி பொதுமக்கள் உயர் சிகிச்சைக்காக மதுரையை பாளையங்கோட்டை மருத்துவமனைக்கு செல்லாமல் அனைத்து உயர்தர சிகிச்சையும் இராஜபாளையம் மருத்துமனையில் கிடைக்க வேண்டுமென்ற நோக்கில் இராஜபாளையம் அரசு மருத்துவமனையை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மருத்துவத்துறை அமைச்சர் அவர்களுக்கும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இராஜபாளையம் தொகுதி பொதுமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

இந்நிகழ்வில் மருத்துவர் சுரேஷ் , நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராஜா செட்டியார்பட்டி சேர்மன் ஜெயமுருகன், சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் பரமசிவன், மருத்துவர்கள் , செவிலியர்கள் மருத்துவமனை பணியாளர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இராஜபாளையம் PACR அரசு மருத்துவமனையை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்படும் என அறிவிப்பு வெளியானது முதல் இன்று வரை மருத்துவமனை கட்டிடப் பணியையும் மருத்துவமனைக்கு தேவைபடும் கருவிகள் மருத்துவர்கள் செவிலியர்கள் மருத்துவமனை பணியாளர்கள் நியமனம் செய்வது வரை அனைத்து பணியையும் எம்.எல்.ஏ தொடர்ந்து கண்காணித்து வருகிறார்.




வில்லிவாக்கம் தி குட்வில் உயர்நிலைப்பள்ளியில் தந்தை பெரியார் 146 பிறந்தநாள் விழா திராவிடர் கழகம் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி தொண்டர் அணி மாவட்ட துணைத் தலைவர் தோழர் சிட்கோ எஸ்.அன்வர்தீன் சிறப்புரை, பள்ளி நிறுவனர், புலவர் தா.இராஜ மனோகரன் தலைமையில், தாளாளர் அபியேசர் ஆலன் முன்னிலையில் நடைபெற்றது.